30.10.2019

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அசல் வழக்கு எண். 330/2012

பி.சா.1 (ஆரோக்கியசாமி த/பெ.அற்புத அந்தோணி) குறுக்கு விசாரணை:

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு விவரங்கள் யார் சொன்னது என்றால் நானும் என் மனைவி தோமையம்மாளும் சொன்னோம். வழக்கு எதற்காக போட்டுள்ளார்கள் என்றால் 100/9பி1 முழுமையும் வாதியின் சொத்து என்று வழக்கு போட்டுள்ளார்கள். ஆனால் 100/9பி1-ல் 943 சதுரடி வடபாகத்தில் என் மனைவி தோமையம்மாள் கிரையம் வாங்கியுள்ளார். யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் சொத்து குமரனுக்கு சொந்தமானது . அவர் இறந்து விட்டதால் குமரன் மனைவி பிச்சையம்மாளிடம் இருந்து வாங்கினோம். குமரனுக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான். எந்த வருடம் வாங்கினேன் என்றால் 26.06.1985ல் வாங்கினேன். சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தேவசகாயம் இடத்திற்கு கிழக்கு, தேவசகாயம் தோமையம்மாள் இடத்திற்கு தெற்கு, சுக்கிரன் இடத்திற்கு மேற்கு, செல்லமுத்து, குழந்தைவேல் இடத்திற்கு வடக்கு. இதன் சர்வே எண் என்ன என்றால் 100/9பி1. இதன் நீளம் அகலம் தெரியுமா என்றால் கிழமேல் 41 அடி, தென்வடல் 23 அடி. 943 சதுரடி சர்வே எண் 100/9பி1ல் வடபாகம். நான் வாங்கியுள்ள இடம் எப்படி உள்ளது என்றால் 10 தென்னைமரம் வைத்தோம். அதில் 3 மரங்கள் மட்டுமே தற்போது நன்றாக உள்ளது. காய்கறி தோட்டம் வைத்துள்ளோம். தென்னைமரம் தெற்கு பகுதியில் வைத்துள்ளோமா என்றால் தெற்கு பகுதியில் கிழமேலாக வைத்துள்ளோம். எனக்கு என்ன தொழில் என்றால் முதலில் நான் தமிழ்நாடு கிறிஸ்டியன் கவுன்சிலில் புராஜெக்ட் மேனேஜராக இருந்தேன். காய்கறி தோட்டத்தில் என்ன பயிர் செய்துள்ளேன் என்றால் கத்தரி செடி, சுரை செடி முதலியன போட்டுள்ளேன். வீட்டு உபயோகத்திற்காக வைத்துள்ளேனா அல்லது வியாபாரத்திற்கு கொடுப்பேனா என்றால் வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தியது போக மீதியை தானமாக கொடுத்து விடுவோம். நான் வேலையில் இருக்கும் போது எந்தந்த ஊரில் வேலை செய்துள்ளேன் என்றால் பெரம்பலூரில் செண்டர். அங்கிருந்து எனது மேலதிகாரி எங்கெங்கு போக சொல்கிறாரோ அங்கெல்லாம் சென்று வேலை செய்வேன். அந்த சொத்தில் தான் குடியிருந்து வருகிறேனா என்றால் அந்த சொத்திற்கு பக்கத்தில் வடபுறமாக உள்ள சொத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் வேலி ஏதாவது போட்டுள்ளேனா என்றால் முள்வேலி போட்டுள்ளேன். தாவா சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று காட்ட ரசீது ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய் துறையினரை பலமுறை நேரில்

சந்தித்துள்ளேன். மனுவும் பலமுறை கொடுத்துள்ளேன். ஆனால் அவர்கள் இதுவரை எனக்கு பட்டா எதுவும் வழங்கவில்லை. யாரிடம் மனு தாக்கல் செய்தேன் என்றால் இலால்குடி, வட்டாட்சியரிடம் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக கொடுத்துள்ளேன். அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மேலதிகாரிகளுக்கு ஏதாவது மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். தாவா சொத்துக்கு உரிமையாளர் என்று காட்ட பட்டா வாதிகள் பெயரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2012க்கு பின்பு தெரியும். வாதிகள் பெயரில் பட்டா உள்ள விவரத்தை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரை அணுகிய போது பட்டா உள்ளதையும் அதை கொடுக்காமல் வைத்திருந்ததையும் பின்னர் கொடுத்ததையும் தெரிந்து கொண்டேன். எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 1985ல் வாங்கினேன். 1985ல் இருந்து 2012ம் ஆண்டு வரை 27 வருடங்களாக பட்டா வாங்க நான் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் உடல்நிலை சரியில்லாததால் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. உடல்நிலை சரியில்லை என்று காட்டுவதற்கு நான் ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் நான் தாக்கல் செய்கிறேன்.

வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.